<u>**In the court of the Additional Subordinate Judge, Tenkasi.**</u>

<u>Deposition of Witness</u>

Mcop .322/2023

ம.சா.3 பாஸ்கர்

| | |
|---|---|
| Name | : பாஸ்கர் |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Occupation | : |
| Age | : |
| Date | :05.03.2026 |

சாட்சி அழைப்பாணையின் பேரில் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை ஏற்கனவே வந்தது. நான் Global wind Infrastructure and service Private Limited என்ற நிறுவனத்தில் நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க கொடுக்கப்பட்ட அங்கீகார கடிதம் மூ.த.சா.ஆ 1. எங்களது நிறுவனத்தில் முத்துகிருஷ்ணன் , த/பெ. சிவராமன், மேலகரம், தென்காசி என்ற நபர் இளநிலை பொறியாளராக 1.5.2019 தேதியில் பணியில் சேர்ந்து பணியாற்றினார். அவர் 4.7.2023 ம் தேதி வரை அவர் இறப்பிற்கு முன்பு வரை எங்களது நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார். அவர் இறப்பிற்கு முன்னர் வரை வருடத்திற்கு ரூ.2,28,528/- ஊதியமாக பெற்று வந்துள்ளார். அவருடய 2023 மே, ஜூன், ஜூலை மாதத்திற்கான ஊதிய சான்று இறுதியாக பெற்ற சம்பளத்தின் விபரங்கள், அவர் பணியில் சேர்ந்ததற்கான அறிக்கை மூ.த.சா.ஆ 2 ஆகும். அவர் பணியில் நல்ல உடல்நிலையுடன் பணி செய்து வந்தார்.

3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

நீதிமன்றத்தின் அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். இறந்து போன முத்துகிருஷ்ணன் வேலை செய்த நிறுவனத்தில் நான் நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். எங்களது நிறுவனம்

வருமான வரி செலுத்தி வருகிறது. அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு முந்தையநாள் வரை இறந்து போன நபர் எங்களது நிறுவனத்தில் வேலை செய்துள்ளார்.

(ஓம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.